# திருக்குறளில் அறம்

99

பெ.மரியஜோசப்
முனைவர் பட்ட ஆய்வாளர்
சிஎஸ்ஐபிஷப் அப்பாசாமி கலைஅறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்
**joe.mariain@gmail.com**,

**ஆய்வுச்சுருக்கம்:**

தமிழ் மண்ணின் , மக்களின் தாரகமந்திரம் அறம் . அறம் செய்ய விரும்பு என்பதே அவர்களின் பாலபாடம் . அகத்திலும் புறத்திலும் அறம் என்னும் இவ்ஒழுகலாற்றைத் தமிழர்கள் வழிவழியாகத் தங்கள் உயிரினும் மேலாக ஓம்பிவருகின்றனர். வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் இவ்வறத்தைத் தமிழ்ப் புலவர்களும் உயர்த்திப் பிடித்து தங்கள் பாடல்களின் வழியே மக்களிடம் கொண்டு சேர்த்தனர் . குறிப்பாக பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பல இப்பணியில் பெரும் பங்கு வகிக்கின்றன.இத் தொகைநூல்களில் முத்தாய்ப்பாக முதலிடம் பெறுவது திருக்குறள். அறத்திற்கு என தனியே ஒரு இயல் ஒதுக்கப்பட்டாலும், அறத்தோடு வாழ்ந்து அறத்தின் அடிப்படையில் பொருளீட்டி , இன்பம் துய்ப்பதிலும் அறவழிநிற்க வழிகாட்டுகிறது, வழிநடத்துகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டு இருந்தாலும் , இன்றும் என்றும் வாழும் மக்களுக்கு வழிகாட்டி , எக்காலத்திற்கும் பொருந்தும் அறக்கருத்துக்களை வலியுறுத்துகின்றது. திருக்குறளில் குறிக்கப் பெற்றுள்ள கருத்துக்கள் இன்றைய காலகட்டத்திற்கும் தேவைப்படுகின்றன.

குறிப்புச் சொற்கள் : அறம், திருக்குறள், அறவழி, பொதுமை , அறவியல், அறநூல்.

**முன்னுரை:**

தங்கு தடையில்லாமல் கட்டற்று நாடோடியாகச் சுற்றித்திரிந்த மனிதன் ஆற்றங்கரைகளில் நிலையாக வாழத்தலைப்பட்டான். அவனது குடும்பமும் உறவுகளும் ஒன்று கூடிவாழ முனைந்தனர். அவர்கள் என்று இனைந்து வாழ முற்ப்பட்டார்களோ அன்றே தங்கள் சுதந்திரத்தைச் சிறிது விட்டுக் கொடுத்து ஒரு சில எல்லைகளுக்குள் வாழத் தலைப்பட்டார்கள். அவர்களாகவே தங்களுக்குள்ளாகச் சில சட்டதிட்டங்களை வரையறுத்துக் கொண்டார்கள்.இவையே வாழ்வியல் நெறிமுறைகளாக உருவெடுத்தன.இந்த நெறிமுறைகள் காலங்காலமாகச் செவிவழிச்செய்திகளாகவும், கதைகளாகவும், நாட்டுப்புறப் பாடல்களாகவும், வாய்மொழி இலக்கியங்களாகவும் அவ்வப்பொழுது சமூகத்துக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. காலப்போக்கில் இவை பல்வேறு வகையில் உரைவடிவம் பெற்றன. இதையே அறம் என்றும், அதன்படி வாழ்வதே அறவாழ்வு என்றும், அவ்வாறு வாழ்பவரை அறவோன் எனவும் மக்கள் அழைத்தனர்.

இத்தகைய அறக்கருத்துக்கள் சாதி, சமயம், இனம் , மொழி, நாடு , கண்டங்கள் கடந்து மனிதன் மனிதனாக வாழவும், தன்னைப் போலவே பிறரையும் கருதி மனித மாண்பைப் போற்றி வாழவும் அழைத்தன. உலகமும் அதையே போற்றுகிறது. அதன்படியே வாழவும் விழைகிறது.

**அறம் என்ற சொல்விளக்கம் :**

அறம் என்ற சொல்லுக்குக் கடமை, நோன்பு, தருமம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினை, அறநூல், அறக்கடவுள், தருமதேவதை , தீப்பயணுண்டாக்குஞ்சொல் ஆகிய பொருள் விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.[1]

"அறு" என்னும் வினைச்சொல் அடிப்படையாகப் பிறந்தது "அறம்" என்னும் சொல்லாகும். அறு" என்னும் அடிச்சொல்லிற்கு "அறுத்துச்செல்" , வழியை உண்டாக்கு , உருவாக்கு , துண்டி வேறுபடுத்து என்ற பலவகைப் பொருள்கள் வழங்கி வருகின்றன. "அம்" எனும் தொழிற்பெயர் விகுதி அறுத்தலாகிய தொழிலை உணர்த்துகிறது. இத்தகைய சொல்லமைப்பியல்ஆராய்ச்சியின் அடிப்படையில் "அறம்" என்னும் சொல்லிற்குப் பின்வரும் விளக்கம் தரப்படுகின்றது. மனிதன் தனக்கெனவரையறுத்துக் கொண்டஒழுக்கமுறைகளின்தொகுதி யே,முழுநிறைவடிவமே அறம் என்பர்.[2]

தமிழர்கள் ஒழுக்க நெறிகளைத் தங்களது வாழ்க்கை அடித்தளமாக அமைத்துக் கொண்டு அவற்றைப் போற்றி வாழ்ந்தனர். இத்தகைய நெறிகளின்தொகுப்பையே அறம் எனவும் வழங்கினர்.

அறம் என்பதைப் பண்டைய தமிழ் மக்கள் ஒரு கொள்கையாகவோ , கோட்பாடாகவோ. சமயமாகவோ கருதவில்லை. அவர்களின் வாழ்க்கை நெறி முறையாகவே கருதிப் போற்றினர். ஒழுக்கநெறிக்குரிய விதிமுறைகளின் தொகுப்பே அறம் என வழங்கப்பட்டது.[3]

இத்தகைய அறக்கருத்துக்கள் சிறு மக்கள் குழுவிடையே தோன்றி , அது அம் மக்களால் பின்பற்றப்பட்டு பிற குழுக்களுக்கும் பரவுகின்றது. இவ்வாறு அது பரந்து விரிந்து உலக மக்களுக்கு பொதுவாகிறது என்ற ஜெயமோகன் [4] அவர்களின்கருத்தும் கவனிக்கத்தக்கது .ஆகவே, அறம் என்பதைச் சொல்ல வேண்டுமானால் மனிதத் தன்மையின் அடிப்படையில் தனி மனிதனாகவோ அல்லது குழுவாகவோ தங்களுக்குள் உண்டாக்கிக் கொண்ட நடத்தைகளின் தொகுப்பு என்று கூறலாம்.

அறம் என்பது இதுதான். ஒரு மனிதக்குழு தனக்குள்உருவாக்கிக்கொள்ளும் நெறிகள். இறுதியாக வகுத்துக்கொண்ட நடத்தைகள். செய்யக்கூடியவை , செய்யக்கூடாதவை, செய்தே ஆகவேண்டியவை அடங்கிய ஒரு வழிகாட்டித்தொகை. அதுவே அறம்.[5]

தனிமனிதன் ஒருவன் மக்களோடு மக்களாக வாழ்ந்து மரணித்து விடாமல் தனக்கெனத் தனிப்பாதை வகுத்து உண்மை அன்பு , நீதி , நேர்மையின்வழியிலே தன் வாழ்க்கையை வாழ்வதற்கு இவ்வறம் தூண்டுகிறது.நேர்மையான வாழ்க்கை வாழ்வதற்குரிய சட்டமாக அறம் விளங்குகிறது.[6] இன்னும் சுருக்கமாக பெருஞ்சித்திரனாரின் கூற்றுப்படி அறம் என்பது பொதுநலம் கருதிய உணர்வு, உரை, செயல்."[7]

**திருக்குறளில் அறம் பெறுமிடம்:**

திருவள்ளுவர் தனது நூலில் அறத்துப்பால் என்ற தனி இயலை அமைத்து இருந்தாலும் மற்ற இரு இயல்களும் அறத்தின் அடிப்படையிலேயே அமைந்திருப்பதைக் காணலாம். முதல் இயலிலே அறத்தின் அடிப்படையைக் கூறிய அவர் , அறத்தின் அடிப்படையில் பொருளீட்டி நாமும் பொருள்ள வாழ்வு வாழ பொருட்பாலிலும், இன்பவாழ்வு வாழ்வதிலும்கூட அறத்தின் அடிப்படையில் அமையவேண்டும் என்பதை அவர் இன்பத்துப்பாலிலும் விளக்குகின்றார். எனவே அவர் தனது முப்பாலிலும் அறத்தையே வலியுறுத்திக் கூறுவதைக் காணலாம்.

**அறம் - வகையும்தொகையும் :**

"அறம் பற்றிப் பேசும் போதுமுப்பால்எனப்படும் திருக்குறள் முழுவதையும் அறம் என்றே சொல்லும் வழக்கு உண்டு என்பது நம் நினைவிற்கு வருகின்றது. இதனால் அறம் என்பது பொருளையும் இன்பத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருத்தல் தெளிவாகின்றது. இதனால் அறம் என்பது தொகை எனவும் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலும் வகை எனவும் ஒருமுறைமையைக் கொள்ள இடம் தருகின்றது.[8]

திருவள்ளுவர் அறம் என்பதை எடுத்தியம்புகின்றபோது அதை மூன்று வகையாகப்பகுப்பதை நம்மால் உணர முடிகின்றது . முதலாவதாக மனதில் தோன்றுகின்ற சிந்தனைகளில், இரண்டாவதாக சொற்களில் - பேச்சில் – மூன்றாவதாக இவை இரண்டும் இணையும் செயல்பாடுகளில் அறம் பெறும் இடத்தை அவர் சுட்டுகின்றார்.

மனத்தால்,சொல்லால் அறத்தின் இயல்பும் அடிப்படையும் கொள்ளவேண்டும் என்றாலும் , செயல்வடிவில் தோன்றும் அறத்திறனே முதன்மையாக அறம் எனக் கொள்ளப்படும். செயலுக்கு உதவாத நிலையில் மனத்தாலும்,வாக்காலும் அறத்திறன் இருக்கும்போது அறத்திறனால் யாருக்கும் பெரும் பயன் இல்லை என்பது வெள்ளிடைமலை. மனத்தறமும் , சொல்லறமும் செயலில் வரும்போதுதான் அவை "அறச் செயல்" என்று சிறப்பிக்கப்பெறும், போற்றப்பெறும்.[9]

**மனத்தறம் :**

மனிதனின் உள்ளத்தில்தோன்றுகின்ற எண்ணங்களும் , சிந்தனைகளுமே அவனை ஆளுகின்றன . ஆகவே, மனதின் ஊற்றுக்கண் தூய்மையாக இருப்பதேஎல்லாவற்றிற்கும் அடிப்படை என்பதை திருவள்ளுவர் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். மனதின் தூய்மையே அடிப்படைப் பண்பு என்பதை

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. குறள் 34 என்றார்.

மனம் தூய்மையாக இருக்கும்பொழுது அதில் குற்றம் தோன்றுவதற்கு வாய்ப்பே இல்லை. மனதைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்ன திருவள்ளுவர் அடுத்த குறளிலேயே மனத்தூய்மையைக் கெடுக்கின்ற நான்கு இழுக்கான செயல்பாடுகளைப் பற்றி நமக்கு அறிவுறுத்தி அவற்றிலிருந்து நம்மைத் தள்ளி நிற்கச் சொல்கின்றார். இத்தகைய நான்கு எண்ணங்களும் நம் மனதில் நுழைந்து தூய்மையைக் கெடுக்காமல் இருக்க நம்மை பார்த்துக்கொள்ளச்சொல்கிறார் .

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். குறள் 35

பிறர் நலன் கண்டு பொறுத்துக்கொள்ளாத தன்மை, மனம் ஏதோ ஒன்றிலே தொடர்ந்து பற்றிக்கொண்டிருத்தல், மனம் முழுவதும் நிரம்பி இருக்கின்ற சினம் , பிறருக்குத் துன்பம் தருகின்ற கடுமையான சொல் இத்தகைய அகத் தாக்கங்கள் மனத்தூய்மையை அழித்து அற உணர்வை கெடுத்துவிடும் என இவ்விரு குறட்பாக்களிலும் அறத்திற்கு இலக்கணம் வகுக்கின்றார்.

அடுத்ததாக நற்செயல் புரிய வேண்டும் என்றால் ஒருவரது மனத்திலே அன்பு என்ற அறம் அடிப்படையாக இருக்கவேண்டும்என்பதை

அறத்திற்கே அன்புசார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. குறள் 76 என்று



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

தன்னால் அன்பு செய்யப்படுகின்றவர்களுக்கு ஒரு துன்பம் நேர்கின்ற பொழுது அந்தத் துன்பத்தை உருவாக்குகின்றவர்களை அழித்து ஒழிக்க அல்லது அவரிடமிருந்து காப்பதற்கு தேவையான வீரத்தையும் அளிப்பது அதே அன்பு என்றும் மொழிகின்றார்.

அதேசமயம் எந்த அளவு சிறிதாக இருந்தாலும் எவ்விடத்திலும் எவருக்கும் மனதாலும் கூட தீங்கு செய்யாமல் இருப்பதே சிறந்தது என்பதை

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தான்ஆம்
மாணா செய்யாமை தலை குறள் 317

என்றும், பிறன் மனை நோக்காத்தன்மையை பேராண்மை என்று அழைப்பது மட்டுமல்லாமல் அது சான்றோருக்கு அறம் மட்டுமல்ல ஒழுக்கமும் கூட என்கின்றார்.

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோஆன்றஒழுக்கு. குறள்:148

இவ்வாறு அறம் வேர்விட்டுத் துளிர்க்கும் விளைநிலமான நம் மனதிலே பொய்ச்சொல்லோ அல்லது பொய்யான வாழ்க்கை முறையோ மனதிலே நுழையாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அதில் தவறினோம் என்றால் நம் மனமே நம்மைத் துன்புறுத்தத் துவங்கிவிடும்,அளவில்லாத துன்பக்கடலில்ஆழ்த்திவிடும்

தன்நெஞ்சுஅறிவதுபொய்யற்கபொய்த்தபின்
தன்நெஞ்சேதன்னைச்சுடும்குறள்: 293

**சொல்லறம் :**

மனிதனின் உள்ளத்தில் தோன்றுகின்ற எண்ணங்களே அவனுடைய சொற்களில் வெளிப்படுகின்றன. அவன் யார் என்பதை உலகிற்குக் காட்டுகின்றன. ஒருவருக்கு ஒன்றை ஈதலைவிட , இனிமையான சொற்களில் பேசுவது மேலானது எனவும்

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல் குறள் 291

அறம் பெருக வேண்டுமென்றால் நல்லவற்றையே பேசிஅல்லவற்றை விலக்கி வைக்க வேண்டும் என்றும்

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின் குறள் 96

ஒருவனுடைய புறத்தூய்மை நீரினால் அமையும். ஆனால் அவர்அகத்தூய்மைஉடையவரா , இல்லையா என்பது அவரது வாயில் இருந்து வரக் கூடிய வாய்மை (வாய் மெய் ) வார்த்தைகளால் அறியலாம் என்றும்

புறந்தூய்மைநீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையான்காணப்படும். குறள்298

உள்ளத்தில் மகிழ்ச்சியோடு , முகமலர்ச்சியுடன் ஒருவர்அருகில் அமர்ந்து , விருப்பத்துடன் முகம் பார்த்து, அவர் முகமலர்ச்சி அடைகின்றவகையிலே அவர்களை இனிமையாகப் பார்த்து , அவர் அருகிலேயே அமர்ந்து, நம்முடைய உள்ளத்திலிருந்து பிறக்கின்ற இனிமையான சொற்களால் அவர்களோடு பேசி உறவாடுவதே சிறந்த அறமாகவும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

அகனமர்ந்துஈதலின்நன்றேமுகனமர்ந்து
இன்சொலன்ஆகப்பெறின் குறள் 92



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

மனம் பொருந்தி வாய்மைபேசுகின்ற ஒருவர் இவ்வுலகிலே தவம், தானம் ஆகிய இரண்டையும் செய்து வருபவர்களை விட மேன்மையானவர் என்கிறார்.

மனத்தொடு வாய்மை மொழியின்தவத்தொடு
தானஞ்செய்வாரின் தலை குறள் 295

இவ்வாறு மனித மனத்திலே வேர்விட்டுத் துளிர்த்த அறமானது, அவன் வாயில் இருந்து வரக் கூடிய வார்த்தைகளால் உரம் பெற்று பரந்துவிரிந்த மரமாகி, பூப்பூத்துக் காய் காய்க்கிறது.

**செயலறம்– அறச்செயல்:**

மனித மனதில் ஊற்றெடுக்கும் எண்ணங்களும் சிந்தனைகளுமே ஒருவருடைய செயல்பாடுகளுக்கு அடித்தளமாகவும் அடிப்படைக் காரணமாகவும் அமைகின்றன. ஒருவருடைய எண்ணம் செயல்வடிவம் பெறுகின்றபொழுதுதான் அது முழுபயனைப்பிறருக்கும் அவருக்கும் கொடுக்கிறது. மனத்தறம் , சொல்லறத்தைவிட செயல் அறமே - அறச்செயலே – சிறந்தது என்பதை வள்ளுவர் பல பாக்களில் சுட்டுகிறார்.

கணவன், மனைவி இணைந்து இல்லறத்தில் மேற்கொள்கின்ற அறமே அறம் என்றும்

அறன்எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பதில்லாயின் நன்று குறள்49

அப்படிப்பட்ட இல்வாழ்க்கையில் அன்பும் , அறமும் இரண்டறக்கலந்து இருக்குமாயின் அதுவே பண்பாகவும்,பயனாகவும் மிளிர்கின்றது என்றும்

அன்பும் அறனும்உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும்பயனும் அது குறள் 45

பொய்யாமை என்கின்ற அறம் ஒன்றை ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில் கடைப்பிடித்து வந்தார் என்றால் அதுவே போதுமானது என்றும், ஏனைய அறச்செயல்கள் அவர் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றும் குறிப்பிடுகிறார்

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று குறள் 297.

அறச்செயல் என்பது எது ? என்பதற்கு அவரே ஒரு உதாரணம் காட்டுகின்றார். பிற உயிர்களைக் கொல்லாமை என்ற செயல்பாடே அறம் என்பதை

அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும். குறள் 321 என்றும்

அறங்களில் எல்லாம் தலையாகிய அறம் என்று குறிப்படுவது ஒருவன் தன்னிடம் உள்ளதைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுத்து பல உயிர்களையும் காப்பாற்றுதலே என்றும் , இத்தகையச் செயல்பாடே அறநூல்கள் கூறுகின்ற அறங்களில் எல்லாம் தலையாயது

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை குறள் 322 என்றும்

அறநூல்கள்கூறுகின்றநெறிமுறைகளின்படி உலகிலே ஒருவர் வாழ்ந்தார் என்றால் அவர் வானுறையும் தெய்வத்திற்கு சமமாக வைக்கப்படுவார். அறத்தை தன் வாழ்விலே கடைப்பிடித்து வருகின்ற



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

ஒருவர் தெய்வத்திற்கு சமமாவார் என்றவர் ஒருபடி மேல் சென்று தெய்வத்தால் படைக்கப்பட்ட மனிதன் அறத்தால் தெய்வநிலைக்கு உயர்த்தப்படுவான் என்று முத்தாய்ப்பாக முடித்தும் வைக்கிறார்.

வையத்துள்வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள்வைக்கப்படும் குறள் 50

**முடிவுரை :**

மானிடப் பிறப்பு என்பது அனைவருக்கும்ஒன்றுதான் . ஆனால் அவர்களை வேறுபடுத்துவது அவர்களின் எண்ணங்களும் , செயல்பாடுகளுமே . அவையே அவர்களுக்கு உயர்வையும், தாழ்வையும் கொடுக்கின்றன.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் குறள் 972

எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒருத்தன்மையானதே . ஆயினும் செய்கின்ற தொழில்களின் ( செய்யும் செயல் வேறுபாடுகளால் மட்டுமே ) உயர்வு தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை என்பது மு வ. வின் வாக்கு.

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல் குறள் 33
அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. குறள் 38

ஆகவே, நாம் செய்ய வேண்டிய அறச்செயல்களை காலம் தாழ்த்தாமல் செய்ய வேண்டிய விதத்தில் சரியாக செய்தோம் என்றால் நம்முடைய வாழ்வு மற்றவர்களுக்கு பயனுள்ளதாகவும், உடன் வாழும் மக்களுக்கு முன்மாதிரியான ஒரு வாழ்க்கையாக வாழ முடியும். என்றும் , அது ஒருவர் இறந்தபின்கூட அழியாப்புகழாய் நிலைத்துத் துணை நிற்கும் என்பதையே திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

**சான்றெண் விளக்கம்:**

1. கழகத் தமிழ் அகராதி, 1985, பக். 59

2. திருநாவுக்கரசு.கத., திருக்குறள் நீதிஇலக்கியம்,1977, சென்னைப் பல்கலைக்கழகம் சென்னை,பக். 23

3. திருநாவுக்கரசு.கத., திருக்குறள் நீதி இலக்கியம், 1977, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை. பக். 49.

4.அறமெனப்படுவது யாதெனின் ,ஜெயமோகன் . http://www.jeyamohan.in/?p=26673 .

5.ந.சுப்புரெட்டியார், தமிழ் இலக்கியங்களில் அறம் நீதி முறைமை, தேன்மழைப் பதிப்பகம், டிசம்பர் 1988, பக் 61

6. திருநாவுக்கரசு.கத., திருக்குறள் நீதி இலக்கியம், 1977, சென்னைப்பல்கலைக்கழகம், சென்னை. பக். 48.

7. பெருஞ்சித்திரனார் திருக்குறள் மெய்ப்பொருளுரை பொது முன்னுரை தென்மொழி பதிப்பகம் சென்னைபக். 256

8. ந.சுப்புரெட்டியார், தமிழ்இலக்கியங்களில் அறம் நீதி முறைமை, தேன்மழைப் பதிப்பகம், டிசம்பர் 1988, பக் 61

9. ந.சுப்புரெட்டியார், தமிழ்இலக்கியங்களில் அறம் நீதி முறைமை, தேன்மழைப் பதிப்பகம், டிசம்பர் 1988, பக் 63

**பார்வைநூல்கள்:**

1. தமிழ் இலக்கியங்களில் அறம் நீதி முறைமை
2 திருக்குறள் மெய்ப்பொருளுரை பொது முன்னுரை
3. திருக்குறள் பரிமேலழகர் உரை
4. திருக்குறள் நீதி இலக்கியம்